மொட்டைக்கடிதப் புகார் வந்தாலும்கூட

# விசாரணை செய்யப்படும்

## கோலாலம்பூர் டத்தோ பண்டார் திட்டவட்டம்



கோலாலம்பூர், செப். 20-

ஊழல், கையூட்டு தொடர்பாக கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் அமலாக்கப் பிரிவினருக்கு எதிராக மொட்டைக்கடிதம் வந்தால்கூட அதுகுறித்து விசாரணை செய்யப்படும் என கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ டாக்டர் மைமுனா முகமட் ஷாரிஃப் நேற்றுக் கூறினார்.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் பணியாளர்களிடையே ஊழல், கையூட்டுகளைத் துடைத்தொழிக்கும் வகையில் இந்தக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் எச்சரித்தார்.

அவர்களுக்கு எதிராகக் கொடுக்கப்படும் புகார் உண்மை என நிரூபிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட அந்த அமலாக்கப் பிரிவினருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுப்பதில் தாம் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை என அவர் உறுதியுடன் கூறினார்.

அவர்களுக்கு எதிராக மொட்டைக்கடிதம் வந்தாலும்கூட அதுகுறித்து விசாரணை செய்யப்படும். என்னைப் பொறுத்தவரை நெருப்பில்லாமல் புகையாது. எந்தப் புகார் வந்தாலும் அதற்கு எதிராக நான் நிச்சயம் நடவடிக்கை எடுப்பேன். எந்தவொரு புகாரும் கோப்புகளில் வைக்கப்படாது என அவர் கூறினார்.

நேற்று உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் மைமுனா கையில் கோலாலம்பூர் எனும் தலைப்பில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதற்கு முன்பு ஐநா மாநாட்டு மன்றத்தில் 6 ஆண்டுகளாகப் பணியாற்றி வந்த அவர் கடந்த 15.8.2024ஆம் தேதி கோலாலம்பூரின் 15ஆவது டத்தோ பண்டாராக நியமனம் செய்யப்பட்டார்.